பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
The EELANADU

மலர் 19 புரட்டாசி 26 ஷவ்வா 28 இதழ் 242
யாழ்ப்பாணம் புதன்கிழமை 12-10-77

# செக். உள்ளூர் விமானம் மே. ஜெர்மனிக்கு கடத்தல்

## இளம் ஜோடி சரண்

பிராங்போர்ட், அக் 11

செக்கோசிலவாக்கிய விமானம் ஒன்றை கடத்திச் சென்ற கடத்தல் காரர்கள் மேற்கு ஜெர்மனியில் அரசியல் தஞ்சம் புகுந்துள்ளனர்.

26 பயணிகளுடன் உள்ளூர் சேவையில் ஈடுபட்டிருந்த போதே இந்த விமானம் கடத்தப்பட்டது.

ஓர் இளம் பெண்ணும் ஓர் இளைஞனுமே இந்த விமானத்தைக் கடத்தினரென்றும் விமானத்தைப்பிராங்போர்ட்விமான நிலையத்தில் இறக்குமாறு விமானிக்குக் கட்டளையிட்ட இந்த ஜோடி மேற்கு ஜெர்மன் பொலிஸாரிடம் சரணடைந்தனர்.

1970ம் ஆண்டுக்குப் பின் இன்று வரை செக்கோஸ்லவாக்கியாவிலிருந்து மேற்கு ஜெர்மனிக்குக் கடத்தப்பட்ட 6வது விமானம் இதுவாகும். (இ)

---

### விடுதலை இயக்கத் தினதும் தலைவனை நான்

# இந்த நாட்டுக்கு விசுவாசமாக இருப்பேனே என்பதுகூட சந்தேகம்

## எம்.பி.க்களின் கருத்தரங்கில் எதிர்க்கட்சித் தலைவர் 'அமிர்'

கொழும்பு. செவ்வாய்

எதிர்க்கட்சித் தலைவனாக மட்டுமின்றி, இந்த நாட்டில் விடுதலை கோரி நிற்கும் இனத்தின் விடுதலை இயக்கம் ஒன்றின் தலைவராகவும் நான் தேசிய அரசுப் பேரவையில் இருந்துவருகிறேன். இந் நிலையில், நான் இந்த நாட்டுக்கு விசுவாசமாக இருப்பேனே என்பதுகூடச் சந்தேகத்திற்கு உரியதுதான்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ஏ. அமிர்தலிங்கம் கொழும்பில் கூறினார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களுக்காக இன்று ஆரம்பமான 4 நாள் கருத்தரங்கில் உரை நிகழ்த்துகையிலேயே திரு. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

### தமிழ்மொழியில் ஆரம்பித்து...

தமிழ் மொழியில் தமது உரையை ஆரம்பித்த திரு. அமிர்தலிங்கம், தொடர்ந்து ஆங்கிலத்தில் நிகழ்த்தினார்.

'சிங்கள மொழியில் நடைபெறும் இக் கருத்தரங்கில் நான் தமிழில் உரையாற்றுவது பொருத்தமற்றது என்பதாலும் எனது உரையை இங்கு உள்ளவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புவதாலும் எனது உரையை ஆங்கிலத்தில் நிகழ்த்துகிறேன்' என்று தமிழில் ஆரம்பித்த திரு. அமிர்தலிங்கம் மேலும் ஆங்கிலத்தில் பேசுகையில் கூறியதாவது;

30 ஆண்டுகளாக பிரிட்டிஷ் பாராளுமன்ற நடைமுறைகளினால் பழக்கப்பட்ட நாம் இம் மாதம் முதலே அம் முறையில் மாற்றம் கண்டுள்ளோம்.

அந்நிய ஆட்சி முறையை

(ட-ம் பக்கம் பார்க்க)

### ஜே. ஆர். ஆச்சரியம்

கொழும்பு, செவ்

இலங்கை மன்றக் கல்லூரிக்கு இன்று வந்த திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இக் கல்லூரிக்கான அத்திவாரக்கல்லை முன்னர் தாமே நாட்டியதாகவும் இன்று அந்த அத்திவாரக்கல்லை கல்லூரியில் எங்குமே காண முடியாமல் இருப்பது பெரும் ஆச்சரியமாக இருக்கிறது என்றும் தெரிவித்தார். (ம-இ)

---

## "மக்களே எம்.பிக்களின் எஜமானர்கள்"

### — பிரேமதாசா

கொழும்பு, செவ்வாய்

"நாட்டு மக்களே எம். பிக்களின் எசமானர்கள். மக்களின் சொற்படியே எம். பி.க்கள் தமது பணிகளை மேற்கொள்ளவேண்டும்."

இவ்வாறு உள்ளூராட்சி, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா கூறினார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அமைச்சர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"தற்போதுள்ள நடைமுறையின்படி பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்கூட எம். பிக்களின் சிபார்சின் பேரிலேயே பெறக் கூடியதாக உள்ளது. இந்நிலைக்குக் காரணம் நிர்வாகத்தில் உள்ள தவறுகளே. இந்நிலை விரைவில் மாற்றியமைக்கப் படும்.

"சகல அமைச்சுக்களிலும் எம். பிக்கள் அடங்கிய குழுக்கள் நியமிக்கப்பட்டு அவர்களின் ஆலோசனையின் உதவியுடனேயே அமைச்சுக்கள் இயங்கும். (ம-இ)

---

## சீருடையில் ஜீப்பில் வந்தவர் கார்ச்சாரதியை தாக்கினராம்

### சுன்னாகம் சம்பவம் பற்றி சாவகச்சேரி பொலிஸில் புகார்

மட்டுவில், செவ்வாய்

சுன்னாகம் சந்தியில் வைத்துச் சிவில் உடையில் ஜீப் ஒன்றில் வந்த பொலிஸ் உத்தியோகத்தர் தம்மைத் தாக்கிக் காயப்படுத்தினரென்று சாவகச்சேரி, சரசாலையைச் சேர்ந்த கார்ச் சாரதி ஒருவர் சாவகச்சேரிப் பொலிஸில் புகார்செய்துள்ளார்.

எஸ். பொன்னுத்துரை என்ற அந்தக் கார்ச் சாரதி இப்போது சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

சுன்னாகம் சந்தியில் தமது காருக்குள் வைத்துத் தம்மைத் தாக்கிய சீருடையில் வந்த பொலிஸ் உத்தியோகத்தர் தம்மைச் சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று தமது வாக்குமூலத்தைப் பதிந்தனர் என்றும் கார்ச் சாரதி சாவகச்சேரிப் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகத் தாம் யாழ்ப்பாணம் பொலிஸ் அதிபரிடம் புகார்செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சாவகச்சேரிப் பொலிஸ் சார்ஜன்ட் திரு கே வீரசிங்கம் விசாரணைசெய்துவருகிறார். (இ)

### இலவசம்

இன்றைய 'ஈழநாடு' இதழுடன் மில்க்வைற் ஸ்தாபனத்தாரின் 'பனைப் பிரசுரம்' என்ற இலவச வெளியீடு இணைக்கப்பட்டுள்ளது.

---

# 500 ஆண்டு அந்நிய ஆட்சி முறையிலிருந்து விடுதலை வேண்டும்

### பிரதமர் ஜே. ஆர். உரை

கொழும்பு, செவ்வாய்

"400, 500 ஆண்டுகளுக்கு முந்திய அந்நிய ஆட்சிமுறைகளையே நாம் இன்றும் பின்பற்றி வருகிறோம். இம்முறைகளிலிருந்து நாம் விடுதலை பெறவேண்டும். இதற்குப் புதிய அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்கவேண்டும் என்தே எம்து அரசின் நோக்கமாகும்."

இவ்வாறு திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறினர் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

'இலங்கையின் சமுதாய அமைப்பு முறையை நாம் பதவியில் இருக்கும் ஆறு ஆண்டுக் காலத்திற்குள் மாற்றி அமைக்க முடியும் என நாம் நம்புகிறோம். அவ்வாறு மாற்றத் தவறின் நீதியான சுதந்திர சமுதாயம் ஒன்றை உருவாக்குவதற்கான அத்திவாரத்தையாவது நம்மால் ஏற்படுத்த முடியும்.

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இந்தியாவிலும் இலங்கையிலுமே பாராளுமன்ற ஆட்சிமுறை திறம்பட இயங்கி வருகிறது. புத்தபிரானும் ஜனநாயகக் கொள்கைகளையே கடைப் பிடித்து வந்தனர்.

சட்டங்களை இயற்றுதல் அவற்றை நிறைவேற்றுதல், நீதிபரிபாலனம் ஆகியவற்றிலேயே ஒரு நாட்டின் நிர்வாகம் தங்கியுள்ளது. நாட்டின் நிர்வாகத்தை திறம்படமேற்கொள்ள எம்.பிக்களின் பணி அளப்பரியது.

### மது அருந்திவிட்டு பேரவைக்கு வந்தால் கடும் நடவடிக்கை

மது அருந்திய நிலையில் தேசிய அரசுப் பேரவைக்கு வரும் உறுப்பினர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கமைய தேசிய அரசுப் பேரவையின் நிரந்தர விதிகளில் மாற்றங்கள் செய்யப்படும் என்றும் திரு. ஜே. ஆர். கூறினர்.

(6ம் பக்கம் பார்க்க)

## "இங்ஸ்லி ஏஜேன்சி"

தேசிய லொத்தர் சபையின் மாவட்ட பிரதம அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளோம். யாழ் மாவட்ட தேர்தல் தொகுதிகள் தோறும் உப-அமைப்பாளர்கள், சில்லறை விற்பனையாளர்கள் உடன் தேவை.

நேரில் தொடர்பு கொள்ளவும்:-

தேசிய லொத்தர்சபை கிளை அலுவலகம் (ஞானம்ஸ்) கட்டிடம் யாழ்ப்பாணம்.

பிரதம அமைப்பாளர்

இல. 120 சப்பல் வீதி யாழ்ப்பாணம்.

7380

# வரி விளம்பரம்

## தேவை

வான்கோழி ஒருசோடி, ஆண்மான் குட்டி அல்லது வளர்ந்ததாகவோ தேவை. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல.7363 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 7363

## விற்பனைக்கு

காங்கேசன்துறை சிமேந்துத் தொழிற்சாலைக்கு அண்மையில் காங்கேசன்துறை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் 4 1/2 பரப்பு பயிர் செய்கைக்குரிய காணித்துண்டு வீடு, கிணறு வசதியுடன் விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் 375/2ம் இலக்கம் 1ம் ஒழுங்கை மானிப்பாய் ரோட், தாவடியில் தொடர்பு கொள்ளவும். 7374

6ம் வகுப்புமுதல் 9ம் வகுப்பு வரையுள்ள மாணவர்களுக்கென நவீனமுறையில் தயாரிக்கப்பட்ட தென்னைத்தும்புத் தொழில் வினவிடைப்பயிற்சிப் புத்தகம் வெளிவந்துவிட்டது. விலை ரூ. 3-00. ஆசிரியர் எவ். எக்ஸ். துரைராசா, 4,டேவிட் வீதி, யாழ்ப்பாணம். 7298

22 ஸ்ரீ தொடருள்ள புதிய எஞ்சினுடன் நல்ல நிலமையில் உள்ள (ஜெ 2) வான் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளுங்கள்: மில்க்வைற் சவர்க்கார தொழிலகம், த. பெ.எண்.77 யாழ்ப்பாணம். 7373

நல்ல நிலையிலுள்ள 2'' சினியர் பழைய மொடல் லூல்சிலி (இங்கிலிஸ்) நீர் இறைக்கும் யந்திரம் விற்பனைக்குண்டு சனி, ஞாயிறு நாட்களில் கிழ்கானும் விலாசத்தில் பார்வையிடலாம். A. S. செல்லையா, கோண்டாவில் கிழக்கு (சந்திக்கண்மை ...) கோண்டாவில். 7376

உடுவில் ஆலடிக்கு அண்மையில் நான்குபரப்புக் காணியும் கல்வீடும் (விவசாய வங்கி அலுவலகத்துக்கு கிட்ட) சிவசுப்பிரமணியம் அதிபர் மல்வம் ஒழுங்கை, உடுவில் 7364

## தவறி விட்டது

திறப்புக் கோர்வை 5-9-77 கோண்டாவில் ஸ்ரேசனில் தவற விட்டு விட்டோம். தகவல் தெரிந்தால் அல்லது நேரில் தந்தால் சன்மானம் தரப்படும். அ. செ.இரத்தினம், பலாலிவீதி, கோண்டாவில். 7377

## பயிற்சிகள்

வெளி நாடுகளில் வேலைகளுக்கு ஏற்ற வெல்டிங், இலெக்றிக் வயறிங், ரேடியோ (Transistor) பயிற்சிகள் இப்போது நடைபெறுகின்றன. விரைவில் City and Guilds (Electrical) மோட்டார் மெக்கானிசம் (Amimi) ஆரம்பமாகும். P. M. G. Certificate (General & Special) இம் மாதம் 14ம் திகதி ஆரம்பமாகிறது. உடன் பதிவு செய்யவும். வெளியூர் மாணவர்களுக்கு தங்கும் வசதிகளுண்டு. மைற் மண்டபம், 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 7307

## இன்றைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி முதலாவது பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், யாழ்ப்பாணம் 'கிறீன்பீல்ட்' விளையாட்டுக் கழகத்துக்குமிடையில், சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இன்று சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி நடைபெறவுள்ளது. [அ]

## இலங்கைப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாண வளாகம் வளாகத்தை மீளத்திறத்தல்

திருநெல்வேலி, வட்டுக்கோட்டை வளாகங்களில் விரிவுரைகள் 1977-10-17ம் திகதி ஆரம்பமாகும். இதுபுதிய மாணவர்களுக்கும் ஏற்புடையதாகும். விடுதிகளில் வதியும் மாணவர்கள் விடுதிகளுக்கு 1977-10-16 ஆம் திகதி பிற்பகல் 6 மணிக்கு முன்னதாகத் திரும்புதல் வேண்டும்.

மேலதிகப் பதிவாளர்.

திருநெல்வேலி,
1977-10-07.

7372

## யா/வைத்திஸ்வர வித்தியாலயம் 1978 6ஆம் வகுப்புப்பிரவேசம்

1978ஆம் ஆண்டு 6ஆந் தரத்தில் அனுமதி கோருவோர் 20-10-77க்கு முன் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பப் படிவங்களை கல்லூரிக் காரியாலயத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

அதிபர்

வைத்தீஸ்வர வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்,
11-10-77.

7378

# நன்றி நவிலல்

## திருமதி சரஸ்வதி பெரியதம்பி

சென்ற சனியன்று (8-10-77) நடைபெற்ற அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் பங்குகொண்ட உற்றார் உறவினர் நண்பர்கள் மற்றும் யாவருக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். தனிப்பட்ட முறையில் நன்றி கூறமுடியாமைக்கு மனம் வருந்துகிறோம்.

இவ்வண்ணம்

இ. மு. பெரியதம்பி (பரமேஸ்வரி ஸ்ரோர்ஸ், மட்டக்களப்பு), சி வீ. சூரியகுமார் (பரமேஸ்வரி ஸ்ரோஸ், மட்டக்களப்பு), சி. விநாயகமூர்த்தி (காலுஓயா புகையிரத நிலையம்), நீ. முத்துக்குமாரு (முருகன் ஸ்ரோர்ஸ், வாழைச்சேனை), சு. பரமலிங்கம் (முருகன் ஸ்ரோர்ஸ், மட்டக்களப்பு), சு. கனகரட்ணம் (முருகன் ஸ்ரோர்ஸ், மட்டக்களப்பு).

பரமேஸ்வரி வாசா, துன்னாலை வடக்கு, கரவெட்டி. 7365

# யாழ். பொதுசன நூலகத்திற்கு புதிய நூல்கள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பொதுஜன நூல்நிலையத்திற்கு 4500 ரூபா பெறுமதி வாய்ந்த புத்தகங்களைக்கொள்வனவுசெய்வதற்கு யாழ். விசேஷ ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார்.

பொதுஜன நூல்நிலையம் ஆரம்பிக்கப்பட்டுப் பலவருடங்களாகப் புதிய புத்தகங்கள் வாங்கப்படவில்லை என்ற குறையை நிவர்த்திசெய்யும் பொருட்டு 4500 ரூபா பெறுமதியான 500க்கும் அதிகமான புதிய புத்தகங்களை வாங்குவதற்கு யாழ். மாநகர சபை விஷேச ஆணையாளர் ஏற்பாட்டினைச் செய்துள்ளார். (கா-அ)

# ''மனிதனை முழுமை யாக்குவது சமயக் கல்வியே''

யாழ்ப்பாணம்,புதன்

''மனிதனுக்கு ஒழுக்கத்தையும் உயர்வையும் அளிப்பது சமயக்கல்வியேயாகும் ஒருவனை முழுமனிதனாக்குவதற்கும் சமயக்கல்வியே பெரிதும் உதவுகின்றது.''

இவ்வாறு யாழ்ப்பாணம் பெரிய புலம் தமிழ் கலவன் பாடசாலை இந்துமாமன்றக் கூட்டத்தின் போது ஆசியுரை வழங்கிய கல்லூரி அதிபர் திரு.ஞா. குணரத்தினம் குறிப்பிட்டார்.

மன்றநடப்புவருட நிர்வாகிகள் தெரிவும் இடம் பெற்றது. தலைவர் செல்வன் சூரியகுமார் செயலாளர் செல்வன் ச. சௌந்தரராஜா உபசெயலாளர் செல்வி க. சாந்தரூபி பொருளாளர் செல்வி க. பவானி ஒன்பது பேர் கொண்ட நிர்வாசபை உறுப்பினரும் தெரிவாகினர். (கா-அ)

# லொறிக் கூடாரத் திருத்தம்

தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத்தின் 24ஸ்ரீ 4556 இலக்க லொறியின் கூடாரம் திருத்தம் செய்வதற்கும், பெயின்ட் பூசுவதற்குமான கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது. கேள்விப்பத்திரம் ரூ.100/-செலுத்தி தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும். லொறியை வேலை நாட்களில் தலைமைக் காரியாலயத்தில் பார்வையிடலாம். கேள்விப் பத்திரம் 77-10-20ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரம் பதிவுத் தபாலில் அனுப்பப்படவேண்டும். மேல் உறையின் இடது பக்கத்தில் ''24ஸ்ரீ 4556 லொறித் திருத்தம்'' எனக் குறிக்கப்பட வேண்டும்.

பொது முகாமையாளர்

தெல்லிப்பழை ப.நோ.கூ.
சங்கம், தெல்லிப்பழை.
10-10-77

7370

# ஏல விற்பனை

தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத்தின் பென்ஸ் லொறியிலிருந்து அகற்றப்பட்ட கூடாரம் (lorry body) 77-10-20ம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு சங்கத் தலைமைக்காரியாலயத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். ஏல விற்பனையில் பங்கு பற்றுபவர்கள் ரூபா.50/-வைப்புப் பணமாகச் சங்கத்தில் செலுத்த வேண்டும். இப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும் சங்கத்தின் உத்தேச விலைக்கு கேள்விப்பத்திரம் அமையாது போனால் ஏலவிற்பனையை நிறுத்துவதற்குச் சங்கத்திற்கு உரிமை உண்டு.

பொது முகாமையாளர்

தெல்லிப்பழை ப.நோ.கூ.
சங்கம், தெல்லிப்பழை.
10-10-77

7371

# குண்டசாலை மாணவர் எடுத்துள்ள முடிவு

யாழ்ப்பாணம், புதன்

''மீண்டும் குண்டசாலைக்குத் திரும்புமாறு அழைப்பு வரும் பட்சத்தில், தமிழ்ப் பகுதிகளுக்குத் தம்மை மாற்றினாலேயொழியப் போதிய பாதுகாப்பற்ற குண்டசாலைக்கு நாம் மீண்டும் செல்லப்போவதில்லை.''

இவ்வாறு பாதிக்கப்பட்ட குண்டசாலை மாணவரது எதிர்கால நிலைபற்றி ஆராயத் திருநெல்வேலி விவசாயக் கல்லூரியில் விரிவுரையாளர் திரு. சின்னையா தலைமையில் நடைபெற்ற குண்டசாலை மாணவர் கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

குண்டசாலை விவசாயக் கல்லூரித் தமிழ்ப் பிரிவைக் கரடியன் ஆற்றுக்கு மாற்றப் பிரதமர் உறுதியளித்திருந்தபோதிலும் இம்மாதக் கடைசியில் இறுதியாண்டினரைக் குண்டசாலைக்குத் திரும்பும்படி அழைக்கப்பட்டமையினாலேயே இக்கூட்டம் அவசரமாகக் கூட்டப்பட்டதென உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. முன்பு தம்மால் அனுப்பப்பட்ட கடிதங்களுக்குப் பதில் வராமையால் அவற்றிற்கு நினைவூட்டுவது,

மாணவர் குழு ஒன்று சம்பந்தப்பட்ட அமைச்சரையும் மற்றும் உயர் அதிகாரிகளையும் சந்தித்து உரையாடுவது, மீண்டும் குண்டசாலைக்கு வரும்படி அழைப்பு வந்தால் தமிழ்ப் பகுதிகளுக்கு இடமாற்றம் தந்தாலொழியத் தாம் மீண்டும் செல்வதில்லை என்றும்,

மேலும் எமது உடைமைகளைப் பாதுகாப்பாக வைத்திருக்குமாறு குண்டசாலை அதிபருக்குக் கடிதம் எழுதுதல்.

மேற்படி மாணவர்களின் நிலைமைபற்றி மந்திரியுடன் உரையாடத் தெரிவுசெய்யப்பட்ட குழுவில் தெய்வேந்திரன், சிவநேசன், கோபிநாத், மனோகரன், நாகூர்தம்பி, கணேசலிங்கம், ஜெயசுந்தரம் ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

மேலே தெரிவுசெய்யப்பட்ட மாணவர் குழுவும் விரிவுரையாளர் திரு. சின்னையாவும் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தைச் சந்தித்து அவரது ஆலோசனையின்பேரில் முல்லைத்தீவு பா. உ. திரு. சோ. மா செல்லத்தம்புவின் தலைமையில்விவசாய அமைச்சரைச் சந்திக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் இதுபற்றித் தாம் பிரதமருடன் உரையாடுவதாகவும் உறுதியளித்துள்ளார். (கா)

# வீதியில் சென்றவர் லொறி மோதி பலி!

யாழ்ப்பாணம், புதன்

முகமாலையில் நடந்த லொறி விபத்தில், வீதியால் சென்ற வாலிபர் ஒருவர் பலியானார்.

எழுதுமட்டுவாளைச் சேர்ந்த ஆண்டித்தம்பி அழகதுரையின் மரண விசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ். மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினர்.

அழகதுரை பளையிலிருந்து வந்துகொண்டிருந்தபோது முகமாலையில், வேகமாக வந்த லொறியொன்று அவரை மோதிவிட்டுச் சென்றதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

காயமடைந்த நிலையில், சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் பின் யாழ். பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்குமரணமானர். மரண விசாரணையின் பின் விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (கா)

# கோட்டு விற்பனவு விளம்பரம்

அச்சுவேலி - தம்பாலை, துரையப்பா திசைநாயகம் — வழக்காளி

இல. ஈடு / 13590 — எதிராக

அச்சுவேலி – அச்சுவேலி வடக்கு
1. சின்னத்தம்பி மாணிக்கமும்
2. பெண் பொன்னுவும் — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் ஈடு / 13590 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள் 1977 ஆம் ஆண்டு அக்டோபர் (ஐப்பசி) மாதம் 24 ஆம் திகதி (24-10-77) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

## தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 2840/-ம், இதில் ரூபாய் 1600/-க்கு 9-1-73 திகதி தொடக்கம் 22-10-73 திகதி வரைக்கும் 100க்கு 9 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 479-30 சதமும் இதில் செலவில் ரூபா 100/-ம், 23-6-76ல் ரூபாய் 1000/-ம் இறுபட்டது.

## காணிகளின் விபரம்

1. வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி அச்சுவேலிக் கோவிற்பற்று அச்சுவேலி வடக்கு இறை ''காட்டுரியான்'' நெற்பரப்பு 30. இதில் மேற்குப் பக்கமாக அரைவாசிக்குரிய நெற்பரப்பு பதினைந்து (15). எல்லை: கிழக்கு, கணபதி சுந்தையாவுக்குரிய இதன் மிகுதி ஆதனம். வடக்கு, தரவை. மேற்கு 2ஆம் ஆதனம். தெற்கு சின்னத்தம்பி கைம்பெண் வள்ளியம்மையின் ஆதனம். இதடங்கலும்,

2. மேற்படி இறை ''காட்டுரியான்'' நெற்பரப்பு 6 1/4 இதில் கிழக்குப் பக்கமாக அரைவாசிக்கு நெற்பரப்பு 3 1/8. எல்லை: கிழக்கு, 1ஆம் ஆதனம். வடக்கு, நாகப்பர் கிட்டிணரின் ஆதனம். மேற்கு, கணபதி சுந்தையாவிற்குரிய இதன் மிகுதி ஆதனம். தெற்கு ரோட்டு. இதடங்கலும் முற்பதிவு கே 244/149ம், 150ம்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.

தெல்லிப்பழை,
6-9-77.

7366

# ஜெயப்பிரகாஷின் 75-வது பிறந்த நாள்

புதுடில்லி, ஒக். 11

சர்வோதயத் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயணின் 75வது பிறந்த தினம் இன்று இந்தியாவில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

நாட்டில் பல்வேறு பகுதிகளிலும், மக்கள் மத்தியிலிருந்து சேகரிக்கப்பட்ட 75 லட்சம் ரூபாய் இன்று திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணிடம் கையளிக்கப்படவிருக்கிறது.

ஆச்சாரிய கிருபளானி தலைமையில் உள்ள வைரவிழாக் கமிட்டி இதற்கான ஏற்பாடுகளைச்செய்துள்ளது.

உத்தரப் பிரதேச அரசாங்கம் திரு. ஜெயப்பிரகாஷின் 75 வயதைக் குறிக்கும் வகையில் இன்று 75 சிறைக் கைதிகளுக்கு விடுதலை வழங்கியுள்ளது.

# பொலிஸ் நிலையத்தில் நந்தினி ஆஜர்

புதுடில்லி, அக். 11

முன்னாள் ஒரிஸ்ஸா முதலமைச்சர் திருமதி நந்தினி சத்பதி இன்று பொலிஸ் நிலையத்தில் ஆஜரானார்.

அங்கு அவர் வாக்குமூலம் அளிக்கும்படி கேட்கப்பட்டதாகவும், சரியான ஒரு நீதிமன்றத்தின் முன்னர் தாம் வாக்குமூலம் அளிக்கத்தயாராய் இருப்பதாக திருமதி சத்பதி தெரிவித்ததாகவும் தெரிகிறது.

நிர்வாகத் துஷ்பிரயோகம் ஊழல் முதலியவற்றின் பேரில் அண்மையில் கைது செய்யப்பட்ட திருமதி சத்பதி பின்னர் பிணையில் விடுதலைசெய்யப்பட்டார்.

# விவசாயகுழுக்களுக்கு பதில் விவசாய அதிகாரிகள்

கொழும்பு, செவ்வாய்

விவசாயக் குழுக்களுக்குப் பதிலாக, விவசாய அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள். ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுக்கு ஒரு விவசாய அதிகாரி வீதம் இடம்பெறுவர்.

காணி, விவசாய அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்கா மேற்கண்ட முடிவை எடுத்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில், விவசாயக் குழுக்கள் [illegible]ங்கும் நியமிக்கப்பட்டிருந்தது. இக்குழுக்களில் விவசாயம் பற்றி எதுவுமே தெரியாத முதலாளிகளும் வர்த்தகர்களுமே நியமிக்கப்பட்டதாகக் கிடைத்த புகாரைத் தொடர்ந்தே அமைச்சர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.

புதிய திட்டத்தின்படி நாடு எங்கும் 3,000 விவசாய அதிகாரிகள் நியமிக்கப்படுவார்களென்றும், இவர்கள் விவசாயத்துறையில் விசேட பயிற்சி பெற்றவர்களாக இருப்பார்களென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (க-அ)

# ‘இளமையிலிருந்தே பஜனைப் பழக்கம் ஏற்படவேண்டும்’

யாழ்ப்பாணம், புதன்

“மாசுபடாத புனிதஉள்ளம் படைத்த சிறு பராயத்திலேயே இறைவனைப்பற்றியும் இறைவனின் அடியார்களைப் பற்றியுமுள்ள திருப்பாடல்களை பஜனை பண்ணிப்பழக வேண்டும்”.

சாவகச்சேரி நீதிமன்ற மண்டபத்தில் நடைபெற்ற சத்திய சாயிபாபா பஜனைக்கு தலைமைவகித்துப் பேசிய சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. இ. பாலகிட்ணர் மேற்கண்டவாறு கூறினார்.

நீதிபதி பாலகிட்ணர் மேலும் கூறியதாவது “பஜனை செய்வதால் உள்ளம் புனித நிலையடைந்து இறைவனைப் பற்றிய நல்லெண்ணங்களும் நல்லபண்பாடும் மலர்ச்சியடையும். இதுமுதுமைக்கும் உறுதுணையளித்து தூய வாழ்வைஅடையச் செய்யும் முறையில் மாத்திரம் பஜனை செய்ய விரும்புவதிலும் இளமை தொட்டே இப்பழக்கத்தை கையாண்டு வருதல் சாலவும் நன்று”.

பகவானின் திருவுருவப் படத்துக்கு நீதிமன்ற முதலியார் திரு. பொன். வேலாயுதம் மலர்மாலை சூடினார்.

சட்டத்தரணிகள் ஆராச்சிமார் நீதிமன்ற லிகிதர்கள் அனைவரும் பஜனையிற் கலந்துகொண்டனர். (சா)

# ஹோமியோபதி சபையை நிறுவுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

ஹோமியோபதி கவுன்சிலை உடனடியாக நிறுவுமாறு வட இலங்கை ஹோமியோபதி சங்கம் சுகாதார அமைச்சரைக் கோரியுள்ளது.

ஹோமியோபதி தொழிலைச் சீராகவும், சிறப்பாகவும் செயலாற்றச் செய்யவும், இவ்வைத்திய முறையை இப்பகுதி மாணவருக்குப் போதிப்பதற்கும் ஏதுவாகவும் 1970-ம் ஆண்டின் 7-ம் இலக்க ஹோமியோபதி சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு ஹோமியோபதி கவுன்சிலை (சபையை) உடனடியாக நிறுவ சுகாதார அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று வட இலங்கை ஹோமியோபதி சங்கம் கோரியுள்ளது.

கோரிக்கையை வட இலங்கை ஹோமியோபதி சங்கத்தலைவர் திரு. அ. கிருஷ்ணசாமி சுகாதார அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளார். (கா)

# தாய்லாந்து மன்னரைக் கொல்ல முயற்சி

லண்டன், அக். 11

தாய்லாந்து மன்னரைக் கொலைசெய்ய முயன்றதாக மூன்று பேரை பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

பயங்கர இயக்கங்களைச் சேர்ந்த கைதுசெய்யப்பட்ட மூவரும் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டனராம். (இ)

# “பண்பாடுகளின் உறைவிடமாக நாடு விளங்கவேண்டும்”

## பரிசளிப்பு விழாவில் ஸ்கந்தா முன்னாள் அதிபர்

யாழ்ப்பாணம், புதன்

“நாடு என்பது மனிதனின் பண்பாடுகளுக்கு உறைவிடமாக விளங்கவேண்டும். பண்புடையவர்கள் இல்லையானால் எங்கள் நாடு, சமயம், மொழி எப்போதோ மறைந்திருக்கும். தமிழினத்தின் வாழ்வு சமயப் பண்பிலே வளர்ந்துவளம்பெற்றது. எத்தொழிலைச் செய்தாலும் எந்த நிலையில்நின்றாலும் மனிதப்பண்பைப்பேணி, எங்கள் இளைஞர்கள் செயல்படவேண்டும்” என்று, ஸ்கந்தவரோதயக்கல்லூரி ஸ்தாபகர் நினைவுதின - பரிசளிப்பு விழாவில், முன்னாள் அதிபர் திரு. சி. சுப்பிரமணியம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டுபேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

“நான் 1944ஆம் ஆண்டில் இக்கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்றபொழுது 291 மாணவர்களும், 13 ஆசிரியர்களும் இருந்தனர். 15 வகுப்பறைகளும் ஒரு சிறுஇரசாயன ஆய்வுகூடமும் மட்டுமே இருந்தன. 1961இல் இளைப்பாறிய பொழுது மாணவர்களின் தொகை 2200. 1961ம் ஆண்டில் 40 மாணவர்கள்சர்வகலாசாலைக்கு அனுமதிக்கப்பட்டனர். யாழ்ப்பாணத்தில் முதல் இடத்தையும், இலங்கையில் மூன்றாவது இடத்தையும் பெற்றோம். பதினைந்து ஆண்டு எல்லைக்குள் இப்பள்ளிக்கூடம் ஏறக்குறைய 400 மாணவர்களை சர்வகலாசாலைக்கு அனுப்பியுள்ளது.

“தரப்படுத்தல் முறையினால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இந்த அநியாயமான முறையைக் கையாளாமல் கிராமப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்திருந்தால், எல்லா மாணவர்களுக்கும் நீதி வழங்கியிருக்கலாம். மகாஜனா, ஸ்கந்தாக் கல்லூரிகள் குறுகிய காலத்தில் ஈட்டிய சாதனைகள் இதற்கு ஒரு சான்று. ஸ்கந்தா, 1957ல் யாழ்ப்பாண இந்து. யாழ்ப்பாணக்கல்லூரிகளுடன் உயர்தரத்திற்கு உயர்த்தப்பட்டது. நாம் எவ்வாறு இவ் வெற்றிகளைப் பெற்றோம்? முகாமையாளர் அமரர் வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் வேண்டிய பொழுதெல்லாம் கூசாதுமனம்கோணாது அள்ளி அள்ளிப் பணம் கொடுத்தார். அத்துடன் தலையீடில்லாத நிர்வாகப் பொறுப்பை எனக்குக் கொடுத்தார். உபதலைவர், ஆசிரியர்கள் அனைவரும் முழுமனதுடன் இணைந்துசெயலாற்றினார்கள். சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் இலவசமேலதிக வகுப்புக்களை நடத்தினார்கள். அரசாங்கம் பள்ளிக்கூடங்களைப் பொறுப்பேற்றபின் ஆசிரியர்களுக்குள் ஓர் அசிரத்தை ஏற்பட்டுள்ளது. மாணவர்களை அரசாங்கம் பொறுப்பேற்கவில்லை. அவர்கள்இன்னும் எங்கள்பிள்ளைகள் தான். எங்கள் வெற்றிக்குமூலகாரணமாக இருந்தது, மாணவர்களுடைய முழுஒத்துழைப்பும் அவர்கள் கல்லூரியில் வைத்திருந்த அன்பும்ஆதரவும் தான். துன்புற்ற மாணவர்களுக்கு இது ஒரு புகலிடமாக இருந்தது. வேறுகல்லூரிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட மாணவர்கள் இங்குவந்துதிருந்திப் போயிருக்கின்றனர்.

“இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு, நம்மினம் அல்லற்பட்டு, ஆற்றாது அழுது துடிக்கின்றது. இலங்கை முழுவதிலும் பல்வேறு நகரங்களிலும் கிராமங்களிலும் தொழில் புரிந்த நம் மக்கள் பொருள் இழந்தும், பதவி இழந்தும், உயிரிழந்தும் மானமிழந்தும் போனார்கள். இனக்கலவரம் ஏன் உண்டானது என்றுநான் ஆராயவரவில்லை. இத்தகைய வேளைகளில் இளைஞர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது சிந்திக்கத்தக்கது. ஆயிரக்கணக்கானதமிழ்மக்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கப்பால் வசிக்கின்றார்கள். கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான தமிழ்மக்களின் ஆதனங்களும், பொருள்களும் அங்கு இருக்கின்றன. எங்கள் செய்கைகள் பேச்சுக்கள் அவைகளைப் பாதிக்காவண்ணம் இருத்தல்வேண்டும். உரிமைகளுக்காகப் போராடவேண்டும். அதை அகிம்சை முறை மூலம் நடத்துவதே ஒரேவழி.

“சாதி சமய இனப்பாகுபாடற்ற ஓர் ஐக்கிய இலங்கையைக் கட்டிவளர்க்க மாணவர்களை ஊக்குவித்தோம். இந்நோக்கத்துடன சிங்கள, முஸ்லிம் பெரியார்களை எங்கள் பரிசளிப்பு விழாக்களுக்கு பிரதம விருந்தினராக அழைத்துள்ளோம். அண்மையில் நடந்த அசம்பாவிதங்களினால் நாங்கள் எங்கள் இலட்சியத்தைக் கைவிடவில்லை. தற்போதைய அரசாங்கம்எங்களுக்கு ஆதரவு அளிக்கும்என்றுநம்புகின்றோம். கலவரத்தின் அடிப்படைக் காரணங்களுள் ஒன்று, சமய வாழ்வு வாழாததே. சமயம் வேறு வாழ்வு வேறு என்ற புல்லுணர்ச்சி இன்று நிலவுகின்றது. இருதயத்தில் ஒலிக்க வேண்டிய சமயம் வாயளவில் ஒலிக்கின்றது. வெறும் சுலோகங்களையும், மந்திரங்களையும் வேதங்களையும் இரவிரவாக ஓதுகின்றோம் பொருள் உணர்ந்து சொல்வார் இல்லை. பொருளுணர்ந்து வாழ்வார் இல்லை. அன்பே சிவம் என்போம். புத்தர்கள் ‘மைத்திரி மேத்தா’ என்பார்கள். விஷம் மிக்க அரவத்தையும் கொல்ல மாட்டார்கள். ஆனால் சில அப்பாவி மக்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டார்கள். மைத்திரி, அன்பு, சீவகாருண்யம் போன்ற பெருங்குணங்களை வாழ்க்கையில் கடைப்பிடித்திருந்தால் இன்றையவன்செயல்கள் நடந்திருக்கமாட்டா. சமயத்திற்குப் படுதோல்வி ஏற்பட்டுவிட்டது. இது ஒரு வேதனையும் சோதனையும் நிறைந்த காலம். தமிழ் இனம் பல இன்னல்களுக்கிடையில் தப்பிவாழ்கின்றது என்பதற்குச் சரித்திரம் கூறுகிறது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் எமது சமயத்தை நசுக்கப் பார்த்தார்கள். தோல்வியே கண்டார்கள். பிற நாட்டாராலோ, இனத்தாராலோ ஒரு சமயம் ஒரு மொழி அழிக்கப்படமாட்டாது. பண்பாடு இல்லாது நடந்தால் நாங்கள் எங்களையே அழிப்போம். குறிக்கோள் உயர்ந்ததாகவும் வழியும் நல்லதாகவும் இருக்க வேண்டும் என்று கூறினார்.

# ‘பனையைத் தறிக்காதீர்’

யாழ்ப்பாணம், புதன்

‘பனையைத் தறிக்காதீர் பயனைக் குறைக்காதீர்’ என்ற பிரசுரமொன்றை மில்க் வைற் ஸ்தாபனத்தார் வெளியிட்டுள்ளனர்.

வேலியெல்லை, வெற்றிடங்களில் பனைகளை நிறையப் பயிரிடுமாறும், பனைவெல்லம் சீவசத்தும் ஆரோக்கியமும் நிறைந்தது என்றும் அப்பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது. [அ]

# வளாகங்களுக்கு திரும்பும்படி கோரிக்கை

யாழ்ப்பாணம். புதன்

இனக்கலவரத்தின்போது தத்தமது வளாகங்களைவிட்டு வெளியேறிய சகல வளாக தமிழ் மாணவர்களையும் இம் மாதம் 17ம் திகதி மீண்டும் வளாகங்கள் திறக்கப்படும் போது வளாகங்களுக்குத் திரும்புமாறு பாதிக்கப்பட்ட பல்கலைக் கழக தமிழ் மாணவர்கள். விரிவுரையாளர்கள் அமைப்பு வேண்டுகோள்விடுத்துள்ளது.

மேற்படி அமைப்பின்வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்கள் சார்பில் எமஅமைப்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் பலவற்றையும் பல்கலைக் கழக நிர்வாகத்தினர் ஏற்றுக்கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுக்க இணங்கியிருக்கின்றனர் என்பதைமகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

இதனால் எதிர்வரும் 1[illegible]-ம் திகதி புதியமாணவர்களுக்காக பல்கலைக்கழகங்கள் திறக்கப்படும்போது சகல புதிய மாணவர்களும் தத்தமது வளாகங்களுக்குச் செல்லுமாறுகேட்டுக் கொள்ளப்படுவதோடு சிரேஷ்ட மாணவர்களையும் அவர்களது வளாகங்கள் திறக்கப்படும் பொழுது திரும்பிச் செல்லுமாறும் வேண்டப்படுகின்றனர்.

விடுதி வசதி செய்துகொடுப்பது தொடர்பாக, வளாகநிருவாகத்தினர் மாணவர்களுக்குத் தனித்தனி கடிதங்கள் அனுப்பப்படுமெனத் தெரிவித்துள்ளனர். எனவேஅவ்வாறான கடிதங்கள் கிடைக்கும் பொழுது, விடுதிவசதி கோரி விண்ணப்பிக்கும்படி வித்தியாலங்கார வளாகம் உட்பட சகல வளாகங்களையும் சேர்ந்த மாணவர்களைக்கேட்டுக்கொள்கிறோம். விடுதி வசதி கிடைக்காத மாணவர்கள் சம்பந்தப்பட்ட வளாகத் தலைவருடன் தொடர்பு கொள்ளவும்.

மாணவரின் பாதுகாப்புக் கருதி ஒவ்வொரு வளாகத்திலும் விரிவுரையாளர் ஒருவர் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்படவிருப்பதனால் மாணவர்கள் தங்கள் பெயர், விலாசம் போன்ற விபரங்களை வளாகம் ஆரம்பமாகியதும் அந்தப் பொறுப்பதிகாரியிடம் கொடுத்தல் வேண்டும்.

வளாக மாற்றம்பெற விரும்பும் முதலாண்டு கலை, விஞ்ஞான மாணவர்கள் 6-10-77 அன்று சென்ற அகத்தால் வெளியிடப்பட்ட பத்திரிகை விளம்பரத்திற்கேற்ப விண்ணப்பிக்கவும்.

சிரேஷ்ட மாணவர்கள் எவருக்கும் மாற்றம் கொடுப்பதற்கு அரசாங்கம் விரும்பாத காரணத்தினால் எந்தவொரு சிரேஷ்ட மாணவனும் யாழ். வளாகத்திற்கு மாற்றம் பெற முடியாதிருக்கின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றது.

இவ்வறிக்கையைப் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக சகல வளாக தமிழ் மாணவர்கள். விரிவுரையாளர்கள் அமைப்பின் இணைச்செயலாளர்களான ம. அந்தனிமுத்து சு. தட்சணாமூர்த்தி ஆகியோர் வெளியிட்டுள்ளனர். (கா)

# அரிச்சுவடி இலவசம்

யாழ்ப்பாணம், புதன்

கிழக்கு மாகாணத்தில் வித்தியாரம்பம் செய்யும் பாடசாலைகள் மன்றங்கள் தங்களுக்கு வேண்டிய அரிச்சுவடிகள், தேவி தோத்திரம் போன்றவற்றை மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷனில் அத்தாட்சி காட்டி பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவற்றை மில்க்வைற் ஸ்தாபனம் வழங்கியுள்ளது.

மற்றும் நாட்டின் எந்தப் பகுதியிலுமுள்ள பாடசாலைகள், சிறுவர் பாடசாலைகள், பாலர் பாடசாலைகள் வித்தியாரம்பம் நடத்தவிரும்பின் தமது விலாசத்தை மில்க்வைற் ஸ்தாபனத்தில் பதிவுக்கு அனுப்பி வைத்து அரிச்சுவடிகளை இலவசமாகப் பெற்றுக்கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். (அ)

## நவராத்திரி விரதம் இன்று ஆரம்பம்

# சிவனுக்கு சிவராத்திரி போன்று அன்னைக்கு ஒரு நவராத்திரி

— சோ. புவனேந்திரன் —

கன்னி மாசத்து அன்னை வழிபாடு— அதிலே உள்ளத்தைக் கவரும் ஒன்பது இரவுகள்— அதுவே நங்கையர் போற்றும் நவராத்திரி நோன்பு நவராத்திரி என்ருல் ஒப்பது இரவுகள். திருவருட் சக்தியும் உலக மாதாவுமாகிய உமா தேவியை விசேஷமாக வழிபட்டு, நாம் ஈடேறுவதற்காகிய புண்ணிய காலம் நவராத்திரியாகும்.

"தனம் தரும் கல்வி தரும்
ஒரு நாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வ வடிவும்
தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனம் தரும் நல்லனவெல்லாம் தரும்
அன்பர் என்பருக்கே
கனம் தரும் பூங்குழலாள்
அபிராமி கடைக் கண்களே."

அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம். அம்மையப்பனுகிய சிவனை அப்பனெனப் பணிவதற்கு ஒரு சிவராத்திரிஎப்படியோ, அப்படியே அபிராமியை அம்மை எனப் பணிவதற்கு ஒரு நவராத்திரி உலகத்து நாயகியாகிய அன்னையைவழிபட்டு வரம்பெறவே இந்நவராத்திரி விழா கொண்டாடப்படுகின்றது.

வடக்கே காஷ்மீரத்திலிருந்து தெற்கே இலங்கை வரையிலும் மேற்கே பாஞ்சாலத்திலிருந்து கிழக்கே பர்மாவின் எல்லைப்புறம் வரையிலும் நவராத்திரிப் பண்டிகை வெகு கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது.

உலகை வாழ்விப்பவள் சக்தி என்ற காரணத்தினுல் அவளுக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு இவ்விழா அமைகின்றது. அனந்தம் பெயருள்ள அன்னை பராசக்தி இத்தினங்களில் முச்சத்தியாகின்ருள். முதன் மூன்று தினங்களையும் காமம், குரோதம், உலோபம் ஆகிய தீய தன்மைகளை எதிர்த்துப் போராடி வெல்லுதற்பொருட்டு பயப்பயம் அகன்ற நிலையில் ஆன்ம வீரத்தோடு தெருளும் ஞானத்தினை வேண்டித் துர்க்காதேவியை வழிபடுகின்ருேம்.

அன்னை துர்க்காதேவி இயற்கையாய் இயங்கும் ஐ பூதமாய், உயிர்த்தீயாய் விளங்குகின்ருள். அவள் அண்மையில் நின்று அன்பரைக் காத்தருளும் அருட்சோதி. உலகினில நீதியும் நேர்மையும் நிலைக்க அவள் அருள்வேண்டி நிற்போம்.

அடுத்து மூன்று தினங்களிலும் வறுமையின்றி அனைத்துலகம் வாழும் பொருட்டுப் பொருள்வேண்டி இலக்குமியை வழிபடுகிருேம். இலக்குமி மலரில் வீற்றிருக்கும் திரு. உயர்ந்த செல்வம் வேண்டில் கமலமேவும் திருவின் அருட்பார்வை வேண்டும். அவளைச் சேர்ந்து வாழ்ந்தால் இல்லை என்ற சொல்லே இவ்வுலகில் இல்லாததாகும்.

கடைசி மூன்று தினங்களிலும் அழியாச் செல்வமாகிய கல்விச் செல்வத்தை வேண்டிக் கலைமகளாம் சரஸ்வதியை வழிபடுகிருேம். அன்னை சரஸ்வதி வெள்ளைத் தாமரைப்பூவிலும், வீணை செய்யும் ஒலியிலும், பாவலர் உள்ளத்திலும் வேதக் கருப் பொருளிலும், முனிவர் கருணை வாசகத்திலும் இன்னும் மாதர் தீங்குழலிலும் குழந்தைகள் மழலையிலும் கீதக் குயிலின் இசையிலும் கிளியின் நாவிலும் குலவு சித்திரங்களிலும் எழில் வடிவுகளில் இருப்பிடம் கொண்டுள்ளாள் என்கிருர் கவிமணி. அன்னை சரஸ்வதி வஞ்சமில்லாத் தொழில் புரிந்து வாழும் மாந்தர்க்குக் குலதெய்வம். கைவருந்தி உழைப்பவர்க்கும் கவிஞர்க்கும் கண்கண்ட தெய்வம்.

நவராத்திரி வழிபாட்டின் பொலிவு பத்தாம்நாள் கொண்டாடும் விஜயதசமியோடு முடிவடைகின்றது. விஜயம் என்ருல் வெற்றியைக் குறிக்கும். தசமியிலே வரும் வெற்றி நாளான அன்று ஏடு தொடங்கல், வித்தை தெரிந்தவர் அப்பியாசித்தல், ஆயுத வித்தை என்பவற்றிற்கு விசேஷ தினமாகின்றது. எனவே சிந்தையில் சிவம் மணக்க, செயலில் சக்தி மணக்க, மூத்தை வினையகல, வாணியைப் பாடிப் பரவுவோம். (அ)

# 'யாழ்.மாவட்ட மக்கள் இவர் சேவையை மறவார்'

யாழ்ப்பாணம், புதன்

"மக்களின் தேவையறிந்து சேவைபுரிந்தவரும், நான்கு வருடங்கள் நோயாளிகளுக்கு நற்பணிபுரிந்தவரும், சித்த ஆயுர்வேத வைத்தியத்தில் அதிக ஈடுபாடு கொண்டவருமான திரு. குஞ்சிதபாதத்தின் சேவையை யாழ். மாவட்ட மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள்"

இவ்வாறு கைதடி ஆயுர்வேதக் கல்லூரியில் கடமையாற்றிய டாக்டர் எஸ். ஏ. குஞ்சிதபாதத்திற்கு கைதடி யாழ். ஆயுள்வேத வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு மண்டபத்தில் அளிக்கப்பட்ட பிரியாவிடை வைபவத்திற்குத் தலைமைவகித்து உரையாற்றிய வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் கந்தையா கூறிஞர்.

அவர் தொடர்ந்து தமதுரையில் 'டாக்டர் குஞ்சிதபாதம் இந்த வைத்தியசாலையில் கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக அரும்பணியாற்றிஞர் என்றும் பல வசதியீனங்கள் இந்த வைத்தியசாலையில் இருந்தபோதும் நோயாளரின் நலன் கருதி அவர்களுக்கு அளப்பரிய சேவை செய்தார் என்றும் சித்தவைத்தியத்தில் அதிக ஈடுபாடு கொண்டிருந்த இவர் சிறந்த வைத்திய சிகிச்சையும் அளித்துவந்தது குறிப்பிடத்தக்கது என்றும் கூறிஞர்.

தமக்களிக்கப்பட்ட பிரியாவிடை விருந்துக்கு நன்றி தெரிவித்துப்பேசிய டாக்டர் குஞ்சிதபாதம், பலன் கருதாத சேவையே உண்மையான தொண்டு எனவும், ஒற்றுமையே உயர்வானதெனவும், வைத்திய சேவையானது ஓர் ஒப்பற்ற சேவையென்றும் கூறிஞர். இச்சேவையின் மூலம் கிடைக்கும் பலம் ஆத்ம திருப்தியேயாகும் என்ருர்.

திருவாளர்கள் எஸ். செல்லத்துரை, பற்பராசா, கந்தவனம் ஆகியோரும் பேசினர். (கா-அ)

# "இறுதிவரை கொள்கையுடன் வாழ்ந்த பெருமகன்"

## கார்த்திகேசனுக்குப் புகழாஞ்சலி

அரியாலை, செவ்.

"பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் காலங்களில் இடதுசாரி இயக்கங்களின் ஆதரவுடன் மாணவர்களின் இயக்கங்களுக்குத் தலைமைதாங்கிய பலர் சர்வகலாசாலைகளின் தமது பட்டங்களைப்பெற்று வெளியேறியதும் தமது கொள்கைகளைக் கைவிட்டு மிகவும் உயர்ந்த உத்தியோகங்களைப் பெற்றவுடன் தாம் பேசிய-சார்ந்து நின்ற கொள்கைகளுக்கு எதிராக நடந்து கொண்ட பலரை நாடறியும். இவர்களைப்போலன்றி நீண்டகாலமாக இடதுசாரி இயக்கத்தோடு இணைந்து, அதன் வளர்ச்சிக்காக உழைத்த திரு. கார்த்திகேசனின் மறைவு இடதுசாரி இயக்கத்திற்கும் பாட்டாளி வர்க்கத்திற்கும் ஈடுசெய்யமுடியாத இழப்பாகும்."

இவ்வாறு இலங்கைப் பல்கலைக்கழக யாழ். வளாகப் பேராசிரியர் கலாநிதி கா. இந்திரபாலா வண்ணை கில்னர் மண்டபத்தில் நடைபெற்ற அமரர் மு. கார்த்திகேசனின் அஞ்சலிக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

டாக்டர் சு. வே. சீனிவாசகம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கலாநிதி இந்திரபாலா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"அமரர் கார்த்திகேசன் தாம் கொண்ட கொள்கையிலிருந்து விலகாது தமதுஇறுதிநாள்வரை வாழ்ந்த பெருமகனுவார்.

"பிரித்தானிய ஏகாதிபத்தியம் இலங்கையில் ஆட்சி செய்த காலத்தில், அவர்களால் மிகவும் வெறுக்கப்பட்ட பொதுவுடமைக் கொள்கையைக் கடைப்பிடித்து அதற்கான இயக்கத்தை வளர்க்கத் தன்னை அர்ப்பணித்து உழைத்த கார்த்திகேசன் சிறந்த சோஷலிஸ வாதியாவார். தற்பொழுது இந்நாட்டில் தோன்றியுள்ள இக்கட்டான நிலையில் இவரைப்போன்றவர் நாட்டில் இல்லாதது பெருங்குறையாகும் இவர் தமது இறுதிக் காலம்வரை சாதி மத வர்க்க பேதமற்ற ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்பவேண்டுமென்ற கொள்கையுடன் வாழ்ந்து அதற்காக உழைத்தார்"

கூட்டத்திற்குத் தலைமை வகித்த டாக்டர் சு. வே. சீனிவாசகம் பேசுகையில், "அமரர் தமது ஆசிரியத்தொழில் தவிர்ந்த ஏனைய நேரங்களில் சமூகத்துக்குத்தொண்டு செய்வதையே குறிக்கோளாகக் கொண்டு உழைத்துவந்தார். அவர் ஆற்றிய பணிகளுக்குக் கட்சி கட்சிசார்பற்ற முறையில் நன்றி தெரிவிக்கவேண்டும். இவரது ஞாபகச் சின்னமாக இப்பகுதியில் ஒரு வாசிகசாலை அமைக்க நாம் முயற்சி செய்யவேண்டும்" என்று குறிப்பிட்டார்.

ஓய்வுபெற்ற அதிபர் திரு. சிவபாதசுந்தரம் பேசுகையில், "வடபகுதியில் சோஷலிஸ இயக்கத்தை வளர்க்க உழைத்தவர்களில் திரு. கார்த்திகேசன் முன்னேடியாவார். அவர் மறைந்தாலும் அவரது நாமம் இந்நாட்டு ஏழை எளிய மக்களின் இருதயங்களில் என்றும் விளங்கும் என்றுகூறிஞர்.

வடபிரதேசக் கல்வியதிகாரி திரு. க. சிவநாதன் பேசுகையில், நல்ல நேர்மையான குணம்படைத்த சிந்தனையாளனை கார்த்திகேசன் சமூகத்து மக்கள் எல்லோரும் சிறப்புடன் வாழவேண்டுமென்ற கொள்கையுடன்வாழ்ந்தார் என்ருர்.

மற்றும் பலர் பேசினர்.

கூட்ட ஆரம்பத்தில் அவரது ஆத்மசாந்திக்காக இரண்டு நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது. (அ)

# செந்தமிழ் திலகம்

சுழிபுரம், செவ்.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தினுல் நடாத்தப்பட்ட 11வது பீடாரோகணவிழாவில் சுழிபுரத்தைச் சேர்ந்த திரு. கேளு. நடராஜா "செந்தமிழ்த் திலகம்" என்றபட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டார்.

# பதில் தலைவராக நியமனம்

மன்னர், செவ்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மன்னர்த் தொகுதி அமைப்பாளரும் முன்னுள் எம்.பி யுமான ஜனுப் எஸ். ஏ ரஹீம் நெற் சந்தைப்படுத்தும் சபையின் பதில் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார். இத்துடன் இவர் முந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் இயக்குநராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். (க-அ)


# நவராத்திரி சரஸ்வதி பூஜைக்கு

தேவையான

- விளக்கு கூடம்
- அபிஷேக திரவியங்கள்
- அபிஷேகச் சந்தனம் (உடன் யந்திரத்தினுல் அரைக்கப்பட்டது)
- அபிஷேகக் குங்குமம்
- அபிஷேக விபூதி
- அபிஷேக வாசனுதிகள்
- கற்பூரம், சாம்பிராணி, ஊதிபத்திகள்
- நைவேத்தியப் பொருட்கள் (அவல். கற்கண்டு, சர்க்கரை முதலியன)

மற்றும்

சகல சாமான்களும் நிதானமான விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

கடந்த 44 ஆண்டுகளாக நற்சேவை புரிந்து நற்பெயர் பெற்றவர்கள்.

## எஸ். சுப்பிரமணியம் அன் கோம்பனி,

(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனுதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை, வியாபாரிகளும்)

53, கே. கே. எல். ஸ்ரீட், பெரியகடை, யாழ்ப்பாணம்.
போன்: 541 Residense 7068

"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-14.
போன்: 35825


# பாதிக்கப்பட்ட தமிழர் புனர்வாழ்வு நிதி

தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கான பிரஜைகள் குழுவின் நிதிக்கு பொதுமக்களிடமிருந்து இதுவரை ரூபா 143,008 32 சதம் கிடைத்துள்ளது. இந்நிதிக்கு பணம் செலுத்த விரும்புகிறவர்கள் இலங்கை வர்த்தக வங்கி யாழ். கிளை கணக்கு இல. 3840-க்கு நேராகச் செலுத்தலாம் அல்லது பொருளாளர்களான திரு. லங்கா நேசையா (முகாமையாளர், யாழ். வர்த்தக வங்கி) அல்லதுதிரு. ஆர். ஜே குணரத்தினம் (நிர்வாக இயக்குநர், சீமாஸ் இன்டஸ்றீஸ்) அவர்களிடம் செலுத்தலாம்.

| | |
|---|---|
| ஏற்கனவே சேர்ந்த நிதி | ரூபா126,184-97 |
| பதுளை பொது மக்கள் | 15,000-60 |
| சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை | 60-00 |
| பூனகரி மகா வித்தியாலயம் | 170-00 |
| கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயம் | 215-00 |
| அளவெட்டி தெற்கு அ. மி. த. க. பாடசாலை | 13-00 |
| ஏழாலை தெற்கு ரே. க. த. க. பாடசாலை | 25-00 |
| சுதுமலை பாரதி வித்தியாலயம் | 10-00 |
| அச்செழு த. க. பாடசாலை | 40-00 |
| அச்செழு சைவபிரகாச வித்தியாசாலை | 55-00 |
| புங்குடுதீவு ஸ்ரீ சித்தி விஞயகர் வித்தியாசாலை | 50-00 |
| இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலை | 165-00 |
| மாரீசன்கூடல் சுப்பிரமணிய வித்தியாசாலை, இளவாலை | 20-00 |
| வசாவிளான் ரே. க. த. க. பாடசாலை | 100-00 |
| கல்வியங்காடு இ. த. க. பாடசாலை | 305 05 |
| பரந்தன் இ. த. வித்தியாலயம் | 62 00 |
| நவக்கிரி அ மி. த. க. பாடசாலை, புத்தூர் | 36-00 |
| வல்வை சிவகுரு வித்தியாசாலை | 120-00 |
| காரைநகர் யாழ்டன் கல்லூரி | 100-00 |
| உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம் | 30-00 |
| மாதகல் சென். தோமஸ் ரே. க. பெண்கள் பாடசாலை | 30-00 |
| நயினதீவு மகா வித்தியாலயம் | 117-30 |
| குப்பிழான் விக்னேஸ்வர வித்தியாசாலை | 100-00 |
| மொத்தம் | 143,008-32 |

**Regal** (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-00 p.m only
The long awaited full length documentary on the wonders of Colourful fascinating undersea world of the deep oceans in the glory of Eastman Colour.
**The Great Barrier Reef**
A must film for School children பள்ளிக்கூடப் பிள்ளைகள் பார்க்கவேண்டிய படம்.

**சாந்தி** தினசரி 10-30, 2-30, 6-30 9-45
யாழ். நகர்
போன்; 7642
சிவாஜி கணேசன்
**எங்கள் தங்க ராஜா** (புதிய பிரதி)

**மனோஹரா** எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ்
(யாழ்ப்பாணம்) அறிமுகம் பவானி
தினசரி மு.ப. 10-30 பி.ப 2-30 6-30, 9-45
நடித்த
**உழைக்கும் கரங்கள்**
(ஈஸ்ட்மன் கலர்)

**வெலிங்டன்** (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்—ஜெயபிரபா —அசோகன்
**துணிவே துணை**

**லிடோ** தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
போன்; 7693 சிவாஜி-சாவித்திரி
(யாழ்.நகர்)
**படித்தால்மட்டும்போதுமா**
14-10-77 முதல் **நீதிக்கு தலை வணங்கு**

**RIO** Daily 10-30 a.m. 4-45, 7-00, & 9-30 p.m.
(Jaffna) Last day
**BLIND SWORDS WOMEN**
(Thrill Adventure)
From: 13-10-77
**LONDON COWSPIRACy**

தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
**வின்ஸர்** சிவாஜி, மஞ்சுளா, தேவிகா,
(யாழ்ப்பாணம்) கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
**சத்யம்**
(ஈஸ்ட்மன் கலர்)

**ஸ்ரீதர்** தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ்ப்பாணம்) சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த்
நடித்த
**அன்னக்கிளி**

**ராணி** ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
(யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
**பெண் தெய்வம்**


ஆசிரியருக்குக் கடிதம்:

# உத்தரவுபெற்ற வியாபாரிகள் நியமனம்

புதிய பங்கீட்டு உணவுப் பொருள் விநியோகத்திட்டப் படி, வியாபாரிகளே பாவனையாளர்களைத் தெரிவுசெய்து கொள்ளவேண்டும்.

இத்திட்டம் கிராமசேவகர், காரியாதிகாரி, அல்லது வியாபாரிகளைத் தெரிவுசெய்யும் உதவி அரசாங்க அதிபர்களைச் சந்திக்கும் வழிவகைத்தெரிந்த வியாபாரிகளுக்கு உதவியாக இருக்கும்.

யாழ்ப்பாணத்தில் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கவேண்டிய கடைசித்தேதி 77 ஆகஸ்ட் 28 ஆகும். ஆனால் சில விண்ணப்பதாரர்கள், நியமனக் கடிதங்களை இருவாரங்களுக்கு முன்னரே பெற்றுள்ளனர் என அறிகின்றேன்.

ஒரு விண்ணப்பதாரர் சம்பந்தப்பட்ட உதவி அரசாங்க அதிபரை 5 தடவை சந்தித்தது மட்டுமன்றி 3 தடவை கச்சேரிக்கு நேரடியாகச்சென்ற பின் தான் நியமனக் கடிதம் கிடைத்துள்ளது. ஆக்டோபர் 10-ம் தேதிக்கு முன்னதாக இவர் தமது கணக்கு விபரங்களைச் சமர்ப்பிக்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விண்ணப்பதாரருக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது தொடர்பான தேதி பற்றிய பதிவு எதுவுமில்லை.

அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது பற்றிய தேதி தொடர்பாக எவ்வித பதிவுமின்றி, பல்வேறு திகதிகளில் பர்மிட்டுகளை நேரில் கொடுப்பதற்குப் பதிலாக, ஏன் சகல பர்மிட்டுகளையும் பதிவுத் தபால் மூலம் ஒரே தினத்தில் எல்லாருக்கும் அனுப்பிவைக்கக்கூடாது?

பொதுமக்களின் வசதி கருதியே அரசாங்கம் உத்தரவு பெற்ற வியாபாரிகளை நியமிக்க முடிவு செய்தது.

கூட்டுறவுக் கிளையொன்றில் 1600 கூப்பன்கள் இருக்கும் பட்சத்தில் உதவி அரசாங்க அதிபர் அப்பகுதியில் ஒரு வருடமோ அல்லது இரு வருடமோ கடை நடத்திவரும் வியாபாரிகளில் மிகத்தகுதி வாய்ந்த இருவரைத்தெரிவு செய்யவேண்டும். அக்கடைகளுக்குச் சமீபத்தில் வசிக்கும் 800 பாவனையாளர்களின் கூப்பன்களை மாற்றுமாறு பணிக்க வேண்டும். இது ஊழல்களைக் குறைக்கக்கூடியதாகஇருக்கும்.

பாவனையாளர்களை விண்ணப்பதாரர்கள் தேடிச்செல்வது ஊழலுக்கு வழிவகுப்பதாகும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள உதவிஅரசாங்க அதிபர்ஒருவர் விண்ணப்பதாரருக்கு நான்கு பத்திரங்கள் தேவையாக இருந்தபோதிலும், ஒருபத்திரம் மட்டுமே வழங்கியுள்ளார் அதுவும் இப்பத்திரம் ஆங்கிலத்தில் மட்டுமே அச்சிடப்பட்டுள்ளது. இப்பகுதியில் உள்ள வியாபாரிகளுக்கு ஆங்கிலம் தெரியாது. சுதந்திரக்கட்சி அமைப்பாக இல்லாமல் ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாக இருக்கும் வகையில் இத்திட்டத்தைத் திருத்தியமைக்கவேண்டும்.

டாக்டர்
**கே. கனகரத்தினம்**
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.


**நாகமஹல்**
(சுன்னாகம்)
தினசரி 6-45 10-00
ராஜன்-பானுமதி
நடித்த
**பத்துமாதபந்தம்**

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி பி. ப. 2-30, 7-00
சிவாஜி விஜயா
**ராமன் எத்தனை ராமனடி**


# கேணியை ஆளமாக்கினர்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் புற்றளை மகாவித்தியாலய தேசிய உயர் கல்வி பரீட்சை மாணவர்களின் செயற்திட்டத்தின் ஒரு பகுதியான புலோலி கொட்டுக் கேணியை ஆளமாக்கி சுத்திகரித்தல்வேலை வெகுசிறப்பாக நடைபெற்றது.

1-ம், 2-ம் திகதிகளில் மேற்படி பணியை கல்லூரி மாணவர்களுடன் பொதுமக்களும் சமூகத் தொண்டர்களும் முன்னின்று நடாத்தினர். இச்செயற்திட்டத்தின்மூலம் இக்குளத்தை மிக ஆழமாகத் தோண்டி அதன்மூலம் அப்பகுதி மக்களுக்கு பல பயனுள்ள சேவைகளைச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும் என மாணவர் ஒருவர் தெரிவித்தார். (கா)

# பிரயாணிகள் செய்த ஆர்ப்பாட்டம் பயன்தந்தது

யாழ்ப்பாணம், புதன்

புகையிரதப் பிரயாணிகள் நடத்திய ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்து கொழும்பு செல்லும் பகல் வண்டி, காங்கேசன் துறை புகையிரத நிலையத்திலிருந்து சரியான நேரத்திற்கு காலை 6.50 மணிக்கு புறப்பட்டது. சில தினங்களுக்குமுன் இது நடைபெற்றது.

கோண்டாவில் நிலையத்தில், சுருட்டுப்பெட்டிகள் ஏற்றுவதில் ஏற்பட்ட தாமதத்தினால் பொறுமையிழந்த பிரயாணிகள், மேடையில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில், யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் அரசாங்க, தனியார்துறை ஊழியரும் மாணவ, மாணவிகளும், கலந்துகொண்டனர்.

''அரசுக்கு எதிராக புகையிரத ஊழியர் சதிஎன்றும், ''சுருட்டுமுதலாளிகளுக்கு முதலிடமா என்றும் பிரயாணிகள்'' கோஷமிட்டனர்.

இதைத் தொடர்ந்து புகையிரத நிலைய அதிபரும், ஊழியரும், சிறிது சுறுசுறுப்பாக பணியாற்றி, 10 நிமிடத்துக்குள், வண்டியை புறப்படச் செய்தனர்.

கொக்குவில் புகையிரத நிலையத்தில், மீண்டும் ரயில் தாமதித்தபோது பிரயாணிகள் கோஷமிட்டு, எதிர்ப்புத்தெரிவித்தனர். பின்மேடையில் இறங்கி, சீட்டு விநியோகஸ்தர் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்தனர். 15 நிமிடங்கள் இந்நிலையத்தில் தாமதித்தபின் காலை 8-25 மணிக்கு யாழ்ப்பாண புகையிரதநிலையத்தை வந்தடைந்தது.

கொழும்பு பகல் வண்டி தாமதம்பற்றி, பிரயாணிகள் போக்குவரத்து அமைச்சருக்கு புகார் செய்துள்ளனர். (க)

# கிளிநொச்சியில்மழையினால் அகதிகள் அவதி!

கிளிநொச்சி, செவ்வாய்

கிளிநொச்சி நவீனசந்தை அகதிகள் முகாமில் உள்ள அகதிகள் மழையினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அங்குள்ள 7 மண்டபங்களும் திறந்த மண்டபங்களாக இருப்பதால் அகதிகள் தங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இம்முகாமில் 1987 அகதிகள் உள்ளனரென்று முகாம் பொறுப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

தினமும் அகதிகள் வந்து கொண்டிருப்பதாகவும் நேற்றும் 25 அகதிகள் வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி எம்.பி. ஆனந்தசங்கரி இளைஞர்களின் ஒத்துழைப்பு உடன் அகதிகளுக்கான வசதிகளை செய்து வருகின்றார்.

கிளிநொச்சி பகுதி மக்களும் வர்த்தகர்களும் இதுவரை சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களை அகதிகளுக்கு வழங்கியுள்ளனர்.

அகதிகளுக்கான இருப்பிட உணவு வசதிகளை இப்பகுதி இளைஞர்கள் கடந்த இரு மாதங்களாக தொடர்ந்து செய்து வருகின்றனர். (க)

# இ. போ. ச. சேவைக்கு அமிரின் பாராட்டு

சுழிபுரம், செவ்

''அண்மைக்காலத்தில் நாட்டில் ஏற்பட்ட வன்செயல்சம்பவங்களின்போது வடபகுதியில் கடமையாற்றிய இ. போ. ச. உத்தியோகத்தர்களின் சேவையை என்றும் எம்மால் மறக்கமுடியாது. அதிகாரிகள், காப்பாளர்கள், சாரதிகள் யாவரும் மிகவும் துணிகரமாக எங்கள் மக்களை உரிய இடங்களுக்கு அனுப்பி வைப்பதில் பெரும் சேவையாற்றியுள்ளனர். பத்துஆண்டுகளுக்கு முன்பாக எம்மால் ஆரம்பிக்கப்பட்ட திட்டம் ஒன்று எம்மால் இன்று நிறைவு பெறவும் அதை நானே ஆரம்பித்துவைக்கவும் வாய்ப்புக் கிடைத்தது பெரும்பாக்கியமாகும். நான் நீண்டகாலமாக இப்பகுதிக்கு வருகைதர வாய்ப்பு இல்லாது இருந்தாலும் என்மேல் இப்பகுதிமக்கள் வைத்த அன்பையும் இன்று எனக்கு அளித்த வரவேற்பையும் கொண்டு அன்று இருந்த ஆதரவு இன்றும் குறையாது இருப்பதை நான் காண்கின்றேன்''.

இவ்வாறு சுழிபுரம் வடக்கு கண்ணகை அம்மன் கோவிலிலிருந்து புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பஸ் சேவையை ஆரம்பித்துவைத்துப்பேசிய எதிர்க்கட்சித்தலைவரும், காங்கேசன் துறைத்தொகுதி தேசியப் பேரவை உறுப்பினருமான திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

காரைநகர் இ. போ. ச. டிப்போவினால் நடாத்தப்படும் இச்சேவை சுழிபுரம் வடக்கு கண்ணகை அம்மன் கோயில், பனிப்புலம் வடலியடைப்பு சித்தன்கேணிக்கு ஊடாக நடைபெறும்.

விழாவுக்கு திரு.வே. இராம

(6ம் பக்கம் பார்க்க)


தினசரி 4 காட்சிகள்
**ராஜா** - யாழ்நகர்
ஜெமினி கணேசன்,
கே. ஆர். விஜயா
சுந்தரராஜன், எம். ஆர். ராதா,
சௌகார் நடித்த
**தசாவதாரம்**
கதை வசனம்-டைரக்ஷன்:
கே. எஸ். கோபாலகிருஷ்ணன்


### மணிவாக்கு

கொடுக்கும் தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டுவந்துகொடுக்கும் என்று சோம்பித்திரிந்து சோர்வுடன் இருந்தால் செல்வத்தை எங்கே ஆசை தீரக் காணப்போகிறான்.

—விவேகசிந்தாமணி.

ஈழநாடு
The Eelanaadu

## இந்தியப் பிரயாணம்

ரயில் மூலம் இந்தியா சென்று திரும்புவதற்கான ஏற்பாட்டைப் போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது நேற்று முன்தினம் கோட்டைப் புகையிரதநிலையத்தில் ஆரம்பித்துவைத்தார்.

இலங்கைப் பணத்தைச் செலுத்தி, சென்னை வரைக்கும் செல்வதற்கு அமைச்சர் வழிசெய்துள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட இந்திய உயர் ஸ்தானிகர் திரு. குர்பச்சான்சிங், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான் ஆகியோர் அமைச்சரின் இந்த முயற்சியைப் பெரிதும் பாராட்டியிருக்கிறார்கள்.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் தாயகம் திரும்பும் இந்திய வம்சாவளியினரைத் தவிர வேறு எவருமே இந்தியா செல்வதானால் விமான மூலமே செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தை அரசு ஏற்படுத்தியிருந்தது.

பணம் படைத்தவர்களும் சொந்த லாபம் கருதிச் செல்பவர்களும் தவிர, சாதாரண ஏழைமக்கள் எவருக்கும் இதனால் பயன் ஏற்படவில்லை. தென்னிந்தியாவிலுள்ள திருத்தலங்களுக்குச் சென்று தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் ஏராளமான ஏழை இந்துக்கள் ஏங்கித் தவித்து வந்தார்கள். அந்த ஏக்கம் பயனளித்துள்ளது.

முஸ்லிம் பெருமக்கள் மக்கா நகருக்குத் தம் வாழ்நாளில் ஒரு தடவையாகுதல் புனித யாத்திரை மேற்கொண்டு திரும்புவது தமது சமயக் கடன்களில் ஒன்றாகக் கருதுவதுபோல், தென்னிந்தியாவிலுள்ள தமது சமயத் தலங்களுக்குச் சென்று வழிபட்டுத் திரும்புவதை இந்த நாட்டு இந்துக்கள் தமது வாழ்க்கையின் புனித நோக்கங்களில் ஒன்றாகக் கருதுகிறார்கள்.

இந்துக்களுக்கு மாத்திரமல்ல, பௌத்தர்களுக்கும் அங்கு புனிதத் தலங்கள் உண்டு.

புத்தபெருமான் பிறந்து, வளர்ந்து, பரிநிர்வாணம் அடைந்த புனிதத் தலமும் இந்தியாவிலேயே இருக்கின்றது. முஸ்லிம், கிறிஸ்தவ மக்கள் விரும்பித் தரிசிக்கும் சமயத் தலங்களும் அங்கு நிறைய உண்டு.

எனவே போக்குவரத்து அமைச்சரின் இந்த நல்ல நடவடிக்கையை நாட்டு மக்கள் அனைவருமே வரவேற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

## 6-ம் வகுப்பில் அனுமதி: விண்ணப்ப முடிவு திகதி அக். 20

யாழ்ப்பாணம், புதன்

யாழ். மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளிலும் 1978-ம் ஆண்டில் 6-ம் தரத்திற்கான மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 20-ம் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறு வடமாநில கல்வி அதிபதி திரு. க. சிவநாதன் பணித்துள்ளார்.

யாழ் இந்துக் கல்லூரி வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம், மத்திய கல்லூரி, மகாஜனக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரிகளில் பெரும்பாலான பெற்றோர்கள் தமது பிள்ளைகளைச் சேர்ப்பதில் ஆர்வம் காட்டியுள்ளதால் அதிக விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர்களுக்கான பிரவேசப் பரீட்சை கார்த்திகை மாதம் 26-ந் திகதி நடைபெறும். (கெ-இ)

## இம்புலானை யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், புதன்

இம்மாதம் 21ம் திகதி யாழ்ப்பாணம் வரவிருக்கும் உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறைப் பிரதியமைச்சர் திரு பி. வி. இம்புலானையை வரவேற்பது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்றது.

யாழ். அரசாங்க அதிபர் திரு. டபிள்யு. விஜயபாலா தலைமையில் நடைபெற்ற மேற்படி ஆலோசனைக் கூட்டத்தில் பிரதியமைச்சரின் வரவேற்பு ஒழுங்குகள்பற்றியும் அவரது கவனத்திற்குக் கொண்டுவர வேண்டிய முக்கிய விடயங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்டத்திலுள்ள சகல விசேட ஆணையாளர்களும், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கட்டிடப் பொருட் கூட்டுத்தாபன பிரதிநிதி, தேசிய வீடமைப்பு மாவட்டப் பொறியியலாளர்கள் உட்படப் பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர். (கா)

## இ. போ. ச

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நாதன் தலைமை வகித்தார். இளைப்பாறிய ஆசிரியர் திரு. எஸ். தம்பையா வரவேற்புரை நிகழ்த்தினார். கண்ணகை அம்மனுக்கு விசேடபூசை ஆராதனை நடைபெற்றது.

பெருந்தொகையான மக்கள் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர். திரு. அ. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் நான் தேர்தல்காலத்தில்கூறியபடி வட்டுக்கோட்டைத் தொகுதி மக்களுக்கு இரண்டு தேசியப்பேரவை உறுப்பினர் உதவி கிடைக்குமென்று குறிப்பிட்டேன். நான் தமிழ்பேசும் மக்கள் யாவருக்கும் சேவை செய்யவேண்டியவனாக இருந்தாலும் வட்டுக்கோட்டைத்தொகுதி தேசியப் பேரவை உறுப்பினர் திரு. த. திருநாவுக்கரசுவுடன் சேர்ந்து சேவையாற்றுவேன் என்றார்.

மற்றும் பலர் பேசினர்.

பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் சங்கானை மேற்கு சன சமூக நிலைய முன்றலில் புதிய பஸ் வண்டியை வரவேற்று முன்னாள் பட்டின சபைத் தலைவர் திரு. எஸ். செல்வரத்தினம் தலைமையில் வரவேற்பு வைபவம் ஒன்று நடைபெற்றது.

### வி.பி.பேச்சு

இவ்வைபவத்தில் கலந்துகொண்ட கம்யூனிஸ்ட்கட்சிப் பிரமுகர் திரு. பொன்னம்பலம் பேசுகையில், திரு. அமிர்லிங்கம் பற்றி அன்று ஓர் ஆண்டு விழாவில் நான் குறிப்பிடுகையில், இவர் இலங்கைக்கே தலைமை வகிக்கக்கூடியவர் என்று குறிப்பிட்டேன். இது முற்றும் சரியாகிவிட்டது. அவர் அண்மையில் தேசியப் பேரவையில் ஆற்றிய உரையும் மிகவும் பாராட்டத்தக்கதாகும். இவரால் ஆரம்பிக்கப்பட்ட இப்புதிய பஸ் சேவையும் திறம்பட நடைபெறும் என்பது திண்ணம் என்றார்.

## இன்று செயற்திட்ட வேலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ். ஸ்கந்தவரோதயாக் கல்லூரி தே. க. உ. ப. செயற்திட்டத்தின்கீழ் கந்தரோடை குளத்தை ஆழமாக்கும் வேலையை இன்றுகாலை 9 மணிக்கு மில்க்வைற் ஸ்தாபன அதிபர் ஆரம்பித்து வைப்பார்.

கல்லூரி அதிபர் திரு. சி. தியாகராசா தலைமையில்நடைபெறவிருக்கும் இந்நிகழ்ச்சியில் தேசியஅரசுப் பேரவை உறுப்பினர் திரு. வி. தருமலிங்கம் கலந்து கொள்வார். (க)

## கிணற்றில் சிசுவின் சடலம்

யாழ்ப்பாணம், புதன்

வளலாய் பகுதியிலுள்ள சவக்காலைக் கிணறு ஒன்றிலிருந்து பெண் குழந்தையின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் காங்கேசன்துறைப் பொலிஸ் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பொக்குள் வெட்டப்பட்டு துணியால் கட்டப்பட்டு அழுகிய நிலையில் கிடந்த இப்பெண் குழந்தை பிரசவித்த உடன் உயிரோடு கிணற்றுக்குள் வீசிக் கொல்லப்பட்டிருக்கலாம எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இம்மரணம் சம்பந்தமாக மரணவிசாரணை நடாத்திய மரணவிசாரணை அதிகாரி திரு. சி. கனகரத்தினம் குழந்தையின் தாயாரைக் கண்டிபிடிக்கும் பொருட்டு மேல்விசாரணைக்கு விட்டுள்ளார். (கா)

## 500 ஆண்டு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### சபாநாயகர் உரை

சபாநாயகர் திரு. ஆனந்த டி. இல்வா உரைநிகழ்த்துகையில் கூறியதாவது;

கட்சி அடிப்படையிலன்றி திறமை அடிப்படையிலேயே நாட்டின் சகல பிரிவினருக்கும் நியமனங்கள் வழங்கப்படும்.

திறமையற்றவர்களுக்கும் தகுதியற்றவர்களுக்கும் முன்னைய காலங்களில் பொறுப்பு வாய்ந்த பதவிகள் வழங்கப்பட்டமையினாலேயே கடந்தகால அரசுகள் பெரும் கஷ்டங்களுக்குள்ளாகின. (மா இ)

## நாளை ஆசிரியசங்க பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை தேசிய ஆசிரிய சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் ஒன்று நாளை மாலை 4 மணிக்கு பெரியகடை பாரதி பாஷிய வித்தியாசாலை மண்டபத்தில் யாழ். மாவட்ட தலைவர் திரு. வ. கிருஷ்ண பிள்ளையின் தலைமையில் நடைபெறும்.

கூட்டத்திற்கு உலக ஆசிரிய சம்மேளனத்தின் தலைவரும் இலங்கைஆசிரியசம்மேளத்தின் பொதுக்காரியதரிசியுமான திரு. எல். ஆரியவன்ச கலந்து கொள்ளுகிறார்.

கலவரத்தில் இடம் பெயர்ந்த ஆசிரியர்கட்கு இடமாற்றம், தராதரப்பத்திரமற்ற ஆசிரியர்களின் தகுதியான நியமனத்தை வலியுறுத்தல், 5-ம் தர அதிபர் பதவியை நீக்கி உயர் பதவி வழங்கக் கோரல், சமசம்பள திட்டத்தால் பயனடையாமல் உள்ளவர்களின் நீதியைக்கோரல் ஆகிய முக்கிய கோரிக்கைகள் ஆராயப்படவுள்ளன. (கெ-இ)

## நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், புதன்

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் நவராத்திரிவிழா நாளை ஆரம்பமாகிறது. தொடர்ந்து 21ம் திகதிவரை மாலையில் அபிராமி அந்தாதிபாராயணமும் சைவ சமய அபிவிருத்திக்கழகத்தின் பஜனையும் விசேஷ பூசைகளும் இடம்பெறும்.

### புளியங்கூடலில்

ஊர்காவற்றுறை புளியங்கூடல் ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தானத்தில் நாளை வியாழக்கிழமை முற்பகல் நவராத்திரிவிழா நடைபெறவுள்ளது இறுதித்தினமான 20ம் திகதி சுமங்கலி பூசையும் நவசக்தி பூசையும் 21ம் திகதி சுவாமி விருட்சபூசையும் இடம்பெறும். (கெ)

### வழக்கம்பரையில்

சுழிபுரம், செவ்

வழக்கம்பரை மகாமாரியம்மன் கோவிலில் நாளை முதல் நடைபெறவுள்ள நவராத்திரி விழாவில் தினமும் மாலை ஆறு மணிமுதல் சகல கலாவல்லி மாலை விரிவுரை நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. சமயப்பிரசாரகர் கேணு நடராசா ஆசிரியர் தினமும் விரிவுரையாற்றுவார். விசேஷ பூசை, கூட்டுப்பிரார்த்தனை முதலிய நிகழ்ச்சிகள் தினமும் நடைபெறும். அம்மன்கொலுக் காட்சியும் இடம்பெறும். (அ)

## வான் விபத்தில் சிறுமி பலி!

யாழ்ப்பாணம், புதன்

பாடசாலையால் வந்து கொண்டிருந்த சிறுமி ஒருவர் வான் விபத்தில் பலியானார். இப்பரிதாப சம்பவம் முரசுமோட்டையில் இடம் பெற்றுள்ளது!

பரந்தன் முரசுமோட்டையைச் சேர்ந்த கௌரி சுப்பையா என்ற 7 வயதுச் சிறுமியே மேற்படி பரிதாப மரணத்திற்குள்ளானவராவர்.

சம்பவதினம் பாடசாலையிலிருந்து வீடு நோக்கி வந்து கொண்டிருந்த இச் சிறுமியை வேகமாக வந்தவான் மோதியதாகவும் இதனால் பலத்த காயத்திற்குள்ளான சிறுமி உடனடியாக கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதை அடுத்து அங்கு அவர் காலமானார், என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனை நடாத்திய மரணவிசாரணை அதிகாரி திரு. சி. கனகரத்தினம் விபத்து மரணம் எனத் தீர்ப்பளித்ததோடு வான் சாரதியான சின்னத்தம்பி கணபதிப்பிள்ளையை இம்மாதம் 27-ம் வரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார். (கா)

## இன்று

(மட்டுவில்)

பாதிக்கப்பட்ட தமிழர் புனர்வாழ்வுச் சபையின் நிர்வாகக் குழுக் கூட்டம் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்ணர் தலைமையில் இன்று மாலை சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெறும். (இ)

......

## விசாரணைக் கமிஷன்

கொழும்பு, செவ்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கடந்த 70-ம் ஆண்டு மே மாதம் 29-ம் திகதி முதல் இன்றுவரை ஒழுங்கீனமான முறையில் நியமனங்கள் நடைபெற்றதா என்பது குறித்து ஆராான் திரு. ரி. பி. எம். ஏக்கநாயக்கா தலைமையில் கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

## இந்த நாட்டுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பின்பற்றியதாலோ என்னவோ வெவ்வேறு கட்சிகளே மாறி மாறி ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றி வருகின்றன. அந்நிய ஆட்சி முறையை நமது நாட்டுமக்கள் சரிவர விளங்கிக் கொள்ளாததே இதற்குக் காரணமா? ஏன் இதுபற்றி ஆராய வேண்டும்.

### எதிர்க்கட்சித் தலைவரே அடுத்த தடவை பிரதமர்...

இந்த நாட்டின் ஜனநாயக பாரம்பரியத்தின்படி எதிர்க்கட்சித்தலைவரே பிரதமருக்கு அடுத்ததாக பதில் பிரதமராக வரக்கூடிய வாய்ப்பு இருந்து வருகிறது. ஆனால் இப்படியான ஒரு சந்தர்ப்பத்தை நானோ இந்த நாட்டு மக்களோ எண்ணிக்கூடப் பார்க்கவில்லை.

எதிர்க்கட்சி தலைவர் கடமையைச் சரிவரச் செய்யவில்லை என்று பலர் எம்மீது குற்றம் சுமத்தி வருகின்றனர். விடுதலை இயக்கத்தின் தலைவரான நான் இந்த நாட்டுக்கு விசுவாசமாக நடப்பேனோ என்பதுகூட சந்தேகமாக உள்ளது.

### ஜே. ஆருக்கு பாராட்டு

பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன சிறந்த ஜனநாயகவாதி. ஜே. ஆரின் தலைமையில் ஜனநாயகம் பேணிப் பாதுகாக்கப்படும் என்று நாம் நம்புகிறோம். (மா-இ)

## அத்துலத்முதலி சீனா செல்கிறார்

(கொழும்பு)

வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி இன்று சீனா பயணமாகிறார்.

இலங்கை-சீன அரிசி றப்பர் ஒப்பந்தம் தொடர்பாக பேச்சு நடத்தவே திரு. அத்துலத்முதலி அங்கு செல்கிறார். (ம-இ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் ... 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 12 ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka